**செய்தி வெளியீடு எண்:742** **நாள்: 03.11.2017**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (3.11.2017), சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் வடகிழக்குப் பருவ மழையினால் பாதிக்கப்பட்டப் பகுதிகளை நேரில் பார்வையிட்டு, முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு உணவுப் பொட்டலங்களை வழங்கினார்கள்.

பருவ மழை துவங்கும் முன்னதாக அனைத்து மாவட்டங்களுக்கும், சென்னையில் உள்ள 15 மண்டலங்களுக்கும் மூத்த இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களை கண்காணிப்பு அலுவலர்களாக நியமித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். மேலும், இவர்களை ஒருங்கிணைத்து நிவாரணப் பணிகளை துரிதப்படுத்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்களை நியமித்து நேற்று (2.11.2017) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். இவ்வுத்தரவிற்கிணங்க சென்னையில் 2.11.2017 அன்று இரவு பலத்த மழை பெய்தபோது, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களும் இரவு முழுவதும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டனர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கேற்ப, சென்னையில் 105 நிவாரண முகாம்கள் உட்பட மொத்தம் 114 நிவாரண முகாம்களில் 10,640 நபர்கள் பாதுகாப்பாக தங்கவைக்கப்பட்டுள்ளனர். மழை காலங்களில் ஏற்படக்கூடிய பாதிப்புகளிலிருந்து பாதுகாக்கும் விதமாக 15 நடமாடும் மருத்துவ முகாம்கள் உட்பட 295 மருத்துவ முகாம்கள் செயல்பட்டு வருகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்று (2.11.2017) இரவு பெய்த பலத்த மழையின் பாதிப்பு பற்றி நேரில் கண்டறிய, சென்னை மாநகராட்சிப் பகுதியில் உள்ள இராயபுரம் டாக்டர் விஜயராகவா மேம்பாலத்தின்கீழ் உள்ள ரவுண்டானாவில் தண்ணீர் தேங்கியுள்ள பகுதியிலிருந்து 3 மோட்டார்கள் மூலம் தண்ணீர் அகற்றும் பணியைப் பார்வையிட்டார்கள். தண்ணீர் அகற்றும் பணியை விரைந்து முடிக்குமாறும், மேலும் அடுத்த ஆண்டு பருவ மழைக்கு முன்னர் அந்த இடத்தில் தண்ணீர் தேங்காவண்ணம் மேற்கொள்ள வேண்டிய பணிகளைப் பற்றிக் கேட்டறிந்து, அப்பணிகளை விரைந்து முடிக்க உத்தரவிட்டார்கள்.

அடுத்ததாக, சென்னை, டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர், சென்னியம்மன் கோவில் தெருவில் உள்ள மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் நடைபெற்று வரும் மருத்துவ முகாமை பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு பால், ரொட்டி மற்றும் உணவுப் பொட்டலங்களை வழங்கினார்கள்.

காஞ்சிபுரம் மாவட்டம், பழைய பெருங்களத்தூரில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அன்னை அஞ்சுகம் நகரைச் சேர்ந்த 250 நபர்கள் பாதுகாப்பாக தங்கவைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமை பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரொட்டி, உணவுப் பொட்டலங்கள், வேஷ்டி, சேலை, பாய் மற்றும் போர்வைகளை வழங்கினார்கள். அங்கு தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள மருத்துவ முகாமையும் பார்வையிட்டார்கள்.

அடுத்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், முடிச்சூர் பஞ்சாயத்திலுள்ள அமுதம் நகரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து, அவர்களது குறைகளை கேட்டறிந்தார்கள். மேலும், அப்பகுதியில் சேதமடைந்த சாலைகளை செப்பனிடவும், தேங்கியுள்ள மழைநீரை போர்க்கால அடிப்படையில் வெளியேற்றவும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்கள். மேலும், இப்பகுதி இனி வருங்காலங்களில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்படாமல் இருக்க நிரந்தர தீர்வு காண ஒரு செயல் திட்டத்தினை அரசின் ஒப்புதலுக்கு உடனடியாக அனுப்ப மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் கண்காணிப்பு அலுவலர் திருமதி. பி. அமுதா, இ.ஆ.ப., அவர்களையும் பணித்தார்கள்.

அதன் பின்னர், வரதராஜபுரம் மற்றும் மேற்கு தாம்பரம், தர்காஸ்ட் சாலை ஆகிய பகுதிகளில் 19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 22 கிலோமீட்டர் நீளத்திற்கு மேற்கொள்ளப்பட்ட அடையாறு தூர்வாரும் பணிகளையும், பாப்பன் கால்வாய் அகலப்படுத்தும் பணிகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட நாராயணபுரம் ஏரியின் உபரி நீர் செல்லும் கால்வாயை சீரமைக்கும் பணியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு, பணிகளை விரைந்து முடிக்க ஆணையிட்டார்கள்.

<u>**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் மழையால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்ட பின்னர், செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின் விவரம்:**</u>

‘‘கடந்த **31–**ஆம் தேதி, **1–**ஆம் தேதி, **2–**ஆம் தேதி, மூன்று நாட்களாக, சென்னை மாநகரம் மற்றும் சென்னையை ஒட்டியுள்ள காஞ்சிபுரம் மாவட்டப் பகுதியில், கனமழையின் காரணமாக ஒருசில இடங்களில், தாழ்வான பகுதியில் தண்ணீர் தேங்கியிருந்ததைக் கண்டறிந்து, உடனடியாக மாநகராட்சி மற்றும் புறநகர் பகுதியில் இருக்கின்ற காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுடைய உத்தரவின் பேரிலும், போர்க்கால அடிப்படையில் மாநகராட்சி ஊழியர்கள் விரைந்து பணியாற்றி, இப்பொழுது கனமழையால் தாழ்வான பகுதியில் தேங்கியிருந்த நீரெல்லாம் அகற்றப்பட்டுவிட்டன. மேலும், நாங்கள் பார்வையிடுகின்றபொழுது, பொதுமக்கள், இதற்கொரு நிரந்தரத் தீர்வு வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், கனமழை பெய்கின்றபொழுது தாழ்வான பகுதியில் தேங்கியிருக்கும் நீரை வடிகால் வசதி கொண்டு அகற்றுவதற்காக, சட்டப்பேரவையில், சட்டப்பேரவை விதி எண்.**110–**ன் கீழ் அறிவிப்பு செய்து, முதற்கட்டமாக **1100** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, **386** கிலோமீட்டருக்கு ஆணையிடப்பட்டு, **300** கிலோமீட்டர் இப்பொழுது வடிகால் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றது. எஞ்சிய பணி விரைந்து கட்டி முடிக்கப்படும். மேலும், JICA உதவியுடன் சுமார் **1800** கோடி ரூபாய் மதிப்பீட்டில் எஞ்சியுள்ள வடிகால் பணி துவங்கப்படும்.

மேலும், இந்த மூன்று நாட்கள் பெய்த மழை எந்தெந்த பகுதிகளில் தாழ்வாக இருக்கின்றதோ அந்தப் பகுதிகளுக்கெல்லாம் வடிகால் வசதி செய்து கொடுப்பதற்கு அரசு உண்டான நடவடிக்கை மேற்கொள்ளும். மாண்புமிகு அம்மாவினுடைய அரசைப் பொறுத்தவரைக்கும், **2015** ஆம் ஆண்டு கனமழையின் காரணமாக பல்வேறு இடங்களில், தாழ்வான பகுதியில் தண்ணீர் தேங்கியிருந்ததைக் கண்டறிந்து அதற்குண்டான நடவடிக்கை எடுத்ததன் விளைவாக இன்றையதினம் மழை பெய்தாலும் கூட அந்த தண்ணீரெல்லாம் தேங்காமல் வெளியேற்றப்பட்டிருக்கின்றன. **31–**ஆம் தேதி **14** செ.மீ.

மழை பெய்திருக்கின்றது, **1–**ஆம் தேதி **4** செ.மீ. மழை பெய்திருக்கின்றது, நேற்றையதினம், **2–**ஆம் தேதி **18** செ.மீ. மழை பெய்திருக்கின்றது. ஆகமொத்தம் மூன்று நாட்களில் **36** செ.மீ. மழை பெய்திருந்தாலும் கூட, சென்னை மாநகரப் பகுதியில் எங்கும் தண்ணீர் தேங்காமல், தேங்கிய தண்ணீரை உடனடியாக அகற்றி, மக்கள் எந்த விதத்திலும் பாதிக்காமல் அரசு துரித நடவடிக்கை எடுத்து தண்ணீர் வெளியேற்றப்பட்டிருக்கின்றது.

**கேள்வி:** உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றம் உத்திரவிட்டிருக்கிறது, ஆக்கிரமிப்புகளை அகற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா **?**

**பதில்:** மாண்புமிகு அம்மாவினுடைய அரசு ஆக்கிரமிப்புப் பகுதிகளை தொடர்ந்து அகற்றிக் கொண்டுதான் இருக்கின்றது. அதில் எந்தவித காலதாமதமும் கிடையாது. உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்ற ஆணைக்கிணங்க கரையோரப் பகுதிகளில் இருக்கின்ற ஆக்கிரமிப்புகள் எல்லாம் இடித்துத் தள்ளப்பட்டிருக்கின்றன. Eviction செய்யப்பட்டிருக்கின்றது.

**கேள்வி:** உயர்நீதிமன்றம் அரசு எடுத்திருக்கக்கூடிய இந்த நடவடிக்கை போதாது என்று சொல்லியிருக்கின்றார்கள்.

**பதில்:** பத்திரிகையாளர்களாகிய நீங்களும் எங்களுடன்தான் வந்திருக்கின்றீர்கள். நீங்களே பார்த்தீர்களே. **36** செ.மீ. மழை பொழிந்திருக்கின்றது. இவ்வளவு மழை பொழிந்தும்கூட அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாக எந்த இடத்திலும் மழைநீர் தேங்காமல் வெளியேற்றப்பட்டிருக்கின்றது. இன்றைக்கு பெங்களூரிலும் மழை பொழிந்திருக்கின்றது, எவ்வளவு மழைநீர் பொழிந்திருக்கிறது, மழைநீர் தேங்கியிருக்கின்றது என்று பார்த்திருப்பீர்கள். ஆனால், இன்றைக்கு அம்மாவினுடைய அரசு **2015–**ல் ஏற்பட்ட கனமழையால் தேங்கிய மழை நீரை எப்படி அகற்ற வேண்டுமென்று செயல்படுத்தியதின் விளைவு, இன்றையதினம் எங்கும் மழைநீர் தேங்காமல், மக்கள் எந்தவித துன்பத்திற்கும் ஆளாகாமல், நேற்றையதினம் உத்தரவிட்டதின் விளைவாக எல்லா அமைச்சர்களும் அந்தந்த பகுதிகளுக்கு இரவிலே சென்று விடியும்வரை ஊழியர்கள், அதிகாரிகளோடு இணைந்து விரைந்து பணியாற்றி மழைநீரையெல்லாம் அகற்றி, எந்தப்பகுதியிலும் மழைநீர் இல்லாத ஒரு சூழ்நிலையை உருவாக்கியிருக்கின்றார்கள்.

**கேள்வி:** மழைநீர் பாதிக்கக்கூடிய பகுதிகள் கண்டறியப்பட்டிருக்கின்றது. முக்கியமாக, கொசஸ்தலை ஆற்றில் ஆக்கிரமிப்புகள் அதிகமாக இருக்கின்றது. அதனால்தான், வடசென்னை பகுதிகள் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கின்றது.

**பதில்:** நான் ஏற்கனவே சொல்லியிருக்கின்றேன். ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்ட புகைப்படங்கள் எல்லாம் எங்களிடத்தில் இருக்கின்றது. ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டதெல்லாம் உங்களுக்கே தெரியும். ஏற்கனவே, கரையோரம் இருந்தவர்களுக்கெல்லாம்கூட வீடுகள் ஒதுக்கித் தந்திருக்கின்றோம். பத்திரமான மாற்றிடம் அவர்களுக்கு ஒதுக்கித் தந்திருக்கின்றோம்.

**கேள்வி:** மழைநீர் சூழ்ந்திருப்பதற்கு முக்கியமான காரணம் அடையார், கூவம் சரியாக தூர்வாரப்படவில்லை என்ற குற்றச்சாட்டு இருக்கின்றதே.

**பதில்:** அதெல்லாம் தவறு. ஊடக நண்பர்கள் பார்த்துக் கொண்டுதானே இருக்கின்றீர்கள். அடையாறில் தூர் வாரியிருக்கின்றோம். கரையை பலப்படுத்தியிருக்கின்றோம். பாப்பன் கால்வாய் தூர்வாரப்பட்டு, இரண்டு பக்கமும் அகலப்படுத்தப்பட்டிருக்கின்றது. 2015–ல் குறுகிய கால்வாயாக இருந்தது. இப்பொழுது அகலப்படுத்தியதின் விளைவாக அனைத்து நீரும் வெளியேற்றப்பட்டிருக்கின்றது. கிட்டத்தட்ட 122 ஏரியினுடைய உபரி நீர் அங்கே வந்து சேர்ந்து செம்பரம்பாக்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டு அடையாறில் சேர்கின்றது. ஏரியிலிருந்து வருகின்ற உபரி நீர், கனமழையால் ஏற்பட்ட மழை நீர் பாப்பன் கால்வாய் வழியாக, சுமார் 2000 கனஅடி நீர் வெளியேறிக் கொண்டிருக்கின்றது. கால்வாயை அகலப்படுத்தியதின் விளைவாக தண்ணீர் தேங்காமல், ஊருக்குள் புகாமல் வீடுகள் எல்லாம் பாதிக்காமல், கால்வாய் வழியாக, ஓடையின் வழியாக சென்று கொண்டிருக்கின்றது.

**கேள்வி:** நீங்கள்தான் முதலில் ரூபாய் 100 கோடி அளவில், பின்னர் ரூபாய் 300 கோடி அளவில் குடிமராமத்து பணிகள் துவக்கி வைத்தீர்கள். தமிழகம் முழுவதும் குடிமராமத்துப் பணிகள் மூலமாக நீர்நிலைகள் நிலை எப்படி இருக்கின்றது, எவ்வளவு தண்ணீர் தேங்கியிருக்கின்றது.

**பதில்:** முதற்கட்டமாக, பரிட்சார்த்த முறையில் விவசாயிகள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் கோரிக்கை வைத்தார்கள். பருவமழையின்போது, நீண்டகாலமாக ஏரிகள், குளங்கள் எல்லாம் தூர் வாரப்படாமல் இருந்தது. அதை தூர்வாரினால் அந்த வண்டல் மண் விவசாயிகளுக்கு இயற்கை உரமாகப் பயன்படும். அதனால், ஏரியும் ஆழமாகும், விவசாயிகளுக்கு உரமாகவும் பயன்படும் என்ற அடிப்படையிலே விவசாயிகள் சங்கமும் கோரிக்கை வைத்தார்கள். அதன் அடிப்படையில், அம்மாவினுடைய அரசு முதற்கட்டமாக ரூபாய் 100 கோடி ஒதுக்கீடு செய்து, 1519 ஏரிகள் தேர்வு செய்து இன்றைக்கு அவைகளெல்லாம் நிறைவு செய்யப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், சமூக ஆர்வலர்கள் விருப்பப்பட்டால் அவர்களே பல ஏரிகளை தூர் வாரினார்கள். அதோடு, விவசாயிகளே இணைந்து பல்வேறு ஏரிகளை அவர்களே தூர்வாரியிருக்கின்றார்கள். தூர்வாரி வண்டல் மண்ணை எடுத்தால், விவசாயிகளுக்கு இயற்கை உரமாக கிடைக்கும் என்பதற்காக, அந்தந்தப் பகுதியில் இருக்கின்ற விவசாயிகள் சங்கங்களே முன்வந்து அந்த ஏரிகளை தூர்வாரி, ஆழப்படுத்தியிருக்கின்றார்கள். இதனால் ஒவ்வொரு ஏரியிலும் கிட்டத்தட்ட 30 சதவீதம் நீர் அதிகரித்திருக்கின்றது. இதனால் கொள்ளளவு அதிகரித்திருக்கின்றது. விவசாயிகளுக்குத் தேவையான நீர் கிடைத்திருக்கின்றது.

அதுமட்டுமல்ல, இரண்டாம்கட்டமாக ரூபாய் 300 கோடி இப்பொழுது ஒதுக்கியிருக்கின்றோம். இன்னும் அந்த பணி துவங்கவில்லை. பருவமழை ஆரம்பித்துள்ளதன் விளைவாக, அந்தப் பணிகள் எல்லாம் துவங்காமல் உள்ளது. அதுவும் விரைந்து செயல்படுத்தப்படும். பருவமழை காலங்களில், ஓடையின் குறுக்கே, நதியின் குறுக்கே எங்கெங்கெல்லாம் தண்ணீர் அதிகமாக ஓடுகின்றதோ, எங்கே ஆழமாக இருக்கின்றதோ, அங்கெல்லாம் தடுப்பணை கட்டப்பட்டு, நீர்நிலைகளை உயர்த்த வேண்டும், நிலத்தடி நீரை உயர்த்தவேண்டுமென்று என்ற அடிப்படையிலே அம்மாவினுடைய அரசு மூன்றாண்டுகள் திட்டமாக உருவாக்கி ரூபாய் 1000 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, முதற்கட்டமாக ரூபாய் 350 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, முதற்கட்டப் பணி துவங்க இருக்கின்றது. விரைவாக, ஒப்பந்தம் கோரப்பட்டு, பணிகள் நிறைவுபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.''

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடன், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.செல்லூர் கே. ராஜூ, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி. வேலுமணி, மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு.டி. ஜெயக்குமார், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.ஆர்.பி. உதயகுமார், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத்துறை அமைச்சர் திரு உடுமலை கே. ராதாகிருஷ்ணன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் திருமதி எஸ். வளர்மதி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு ஹன்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப., நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., உணவுப் பாதுகாப்பு ஆணையர் திருமதி பி. அமுதா, இ.ஆ.ப., பொதுப்பணித்துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு எஸ்.கே.பிரபாகர், இ.ஆ.ப., சென்னை மாநகரக் காவல் துறை ஆணையர் முனைவர் அ.கா.விஸ்வநாதன், இ.கா.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு பி. பொன்னையா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் வெள்ளத் தடுப்பு பணிகளை பார்வையிட உடன் சென்றார்கள்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**